[திரு. ஜி. பழனிசாமி] [2002 ஏப்ரல் 22

போட்டு குழப்பி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்திருக்கிறார்கள். ஆகவே அந்த வாரியத்தினுடைய அறிக்கையைச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-35

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குழப்பவில்லை. நான் படிப்பதை நன்றாகக் கவனியுங்கள். "Contribution payable under the scheme shall comprise the contribution payable by the employer". `Employer' என்றுதான் சொல்லியிருக்கிறது. அதாவது கடந்த கால ஆட்சியிலே - நான் கடந்த கால ஆட்சியிலே கொடுத்த Notification-ஐத்தான் இங்கே படிக்கிறேன். நீங்கள் அறிக்கையைப் படிக்கிறீர்கள்.

4. அறிக்கைகள் அளித்தல்

பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள். (குறுக்கீடு) இல்லை. விட்டுவிடுங்கள், விட்டுவிடுங்கள். (குறுக்கீடு). முடிந்துவிட்டது அது. (குறுக்கீடு)

டாக்டர் க. பொன்முடி: கொஞ்சம் விளக்கம் சொல்ல வேண்டும். (குறுக்கீடு)

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

டாக்டர் க. பொன்முடி: நல்ல healthy argument, கொஞ்சம்......

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவையின் 2001-2002 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 49 முதல் 55 வரையிலான ஏழு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.